[11th September 1958

Water supply

* 154 *Q.*—Sri M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கடந்த ஆறுமாதங்களில் தஞ்சை ஜில்லாவில் கிராமத் தண்ணீர் சப்ளை சம்பந்தமான விரிவான திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

The Hon. Sri M. A. MANICKAVELU : The amount spent in the Tanjore district under the Rural Water-supply Comprehensive Scheme during the period from November 1957 to April 1958 is Rs. 1,90,955.

Sri M. C. MUTHUKUMARASWAMY : இன்னும் பல இடங்களில் குடிப்பதற்கு தண்ணீர் வசதி இல்லை என்று புகார் இருப்பதன் காரணமாக, இந்த மான்யத் தொகையை கொஞ்சம் அதிகப்படுத்தி, வேலையை துரிதப் படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த ராஜ்யம் மொத்தத் திற்கும் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்த ஜில்லா விற்கு ரூ. 2 லட்சம். அந்த ரூ. 2 லட்சத்தில் அநேகமாக முக்காலே அரைக் கால் பாகம் செலவழிந்துவிட்டது.

Muniyappa Gounder Motor Service

* 155 *Q.*—Sri N. MARUDACHALAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the issue of bonus for the year 1956–57 to the workers employed in the B. Muniyappa Gounder Motor Service is under conciliation before the Labour Officer, Coimbatore?

The Hon. Sri R. VENKATARAMAN : It is reported that there is no company by the name of B. Muniyappa Gounder Motor Service at Coimbatore.

Sri N. MARUDACHALAM : இந்த சமரஸம் எந்த நிலையில் இருக்கிறது ?

Mr. SPEAKER : அப்படி ஒரு கம்பனியே இல்லை என்று மந்திரி அவர்கள் சொன்னாரே ?

Houses for Harijans

* 156 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of houses built for Harijans in the South Arcot district in 1957; and

(*b*) the amount spent on them?

The Hon. Sri P. KAKKAN : (*a*) 266.

(*b*) Rs. 74,511.

11th September 1958]

Sri M. JAGANNATHAN : திண்டிவனம் தாலுகாவில், உலக்கூர் பிர்க்காவில் கீழ்க்கரணி என்ற இடத்தை சமீபத்தில் அமைச்சர் அவர்கள் கூட பார்வையிட்டார்கள். இந்த இடத்தில் இன்னும் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அதிகமாக காலதாமதம் ஆகிறது இன்னும் பல இடங்களிலும் இம்மாதிரி வீடுகள் கட்டிக்கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. காலதாமதம் ஆகாமல் கூடிய சீக்கிரம் ஏழை ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : எந்தெந்த இடத்தில் வீடுகள் கட்டுவதற்காக கலெக்டர் சிபார்சு செய்கிறரோ, அந்த இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. வெகு துரிதமாகவே வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

Sri A. V. P. ASAITHAMBI : இதுவரையிலும் ஹரிஜனங்களுக்கு பல இடங்களில் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கும் வீடுகள் சிறிய காற்றிற்கும், மழைக்கும் கூட விழுந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்று ஏற்கனவே புகார் வந்திருக்கிறதா ? அப்படி, புகார் வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்காக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகளையாவது நல்ல முறையில் கட்டுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : இம்மாதிரி புகார் ஒன்றும் வரவில்லை. அங்கத்தினர் அவர்களின் அபிப்பிராயம் தான் அப்படி இருக்கிறது என்று நான் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. கட்டப்படும் வீடுகளெல்லாம் நன்றாக கட்டப்படுவதற்குத்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒரு சில இடங்களில் ஏதாவது குறை இருந்தால், பூராவும் அம்மாதிரி விழுந்துவிடுகிறது என்று சொல்லமுடியாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : கனம் ஆர். வெங்கடராமன் மேல் சபைக்கு போகவேண்டியிருப்பதால், அவர்கள் பதில் சொல்லவேண்டிய கேள்விகளை முதலில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

Co-operative Building Societies

* 163 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கூட்டுறவுக் கட்டிடச் சங்கங்களின் கடன் மனுக்களை ஜில்லா டிப்டி ரிஜிஸ்ட்ரார்களே சாங்ஷன் செய்யும்படி பவர் கொடுக்க உத்தேசமுண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Rural Housing Programme

* 169 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any communication has been received from the Ministry of Community Development, Government of India, regarding the selection of villages for the execution of rural housing programme in the State; and

(*b*) if so, the action taken thereon?